# நாணயச் சபை

# இலங்கை மத்திய வங்கி

**2018 யூன் 05** **வங்கித்தொழில் சட்டப் பணிப்புரைகள்** **2018இன் 03ஆம் இலக்கம்**

---

## உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான பணிப்புரைகளுக்கான திருத்தங்கள்

உந்து ஊர்திகள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கான பெறுமதிக்கான கடன் விகிதம் மீதான 2018ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டப் பணிப்புரையானது பின்வரும் பணிப்புரைகளைப் பதிலீடு செய்வதன் மூலம் திருத்தப்படுகின்றது.

3. பெறுமதிக்கான கடன் விகிதத்திலிருந்தான விலக்கல்கள்

3.1 மேலேயுள்ள பணிப்புரை 2இன் வரையறைகள் பின்வருவனவற்றிற்கு வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளுக்கு ஏற்புடைத்தாகாது.

(i) சுற்றுலா அத்துடன்/ அல்லது போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனி அவற்றின் மைய வியாபாரத் தொழிற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுவதற்காக ஊர்தித் தொகுதிகளைக் கொள்வனவு செய்வதற்கு, எது எவ்வாறிருப்பினும் அவ்வாறு நிதியளிக்கப்பட்ட ஊர்திகள் முதற்பதிவுத் திகதியிலிருந்து ஒரு ஆண்டிற்குள் எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் நிறுவனத்திற்கு மாற்றப்படலாகாது; அத்துடன்

(ii) நிதி மற்றும் ஊடக அமைச்சினால் குறித்துரைக்கப்பட்ட நிதிக் குத்தகை முறையின் கீழ் அரச முகவர்களுக்கான ஊர்திகளின் கொள்வனவிற்கு.

3.2 உரிமம்பெற்ற வங்கியொன்று அத்தகைய கொடுகடன் வசதிகளை வழங்கும் பொழுது உள்ளக வரையறைகளைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் போதுமான இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளையும் பின்பற்றுதல் வேண்டும்.

**முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்